உங்கள் வாழ்க்கையில் என்றோ ஒருநாள் வரும் அந்த மறக்கமுடியாத நிகழ்ச்சிகளை என்றும் உயிரோவியமாக வீடியோ படம்பிடித்திட நாடுங்கள்!
ஸ்ரார் ⓢ
வீடியோ கொம்பிளெக்ஸ்
'ராஜ்-கொற்' தபால்கந்தோரடி
கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்.

உதயன்
உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை
விலை ரூ-1/=

STAR ⓢ VIDEO COMPLEX
Any Functions at your Home? Remember this name for VIDEO RECORDING
'RAJ-COT,' NEAR POST.OFFICE, KONDAVIL EAST, KONDAVIL.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ கார்த்திகை மீ 15உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 17 (30-11-1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:- 4

திருகோணமலையில் கைதான ஏழு பேர் மர்ம மரணம்!

நஞ்சூட்டிக் கொலையா?
15 பேருக்கு கட்டாய லீவு

திருகோணமலை, நவ. 30

இம்மாதம் நடுப் பகுதியில் திருகோணமலையில் வைத்துக் கைது செய்யப்பட்ட ஏழு தமிழர்கள் எங்கே? அவர்களின் மர்ம மறைவு இப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அரசாங்க எழுதுவினைஞர் ஒருவர் உட்பட அந்த எழுவரும் நஞ்சூட்டிக் கொலை செய்யப் பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அந்த ஏழு பேரின் மர்ம மறைவு குறித்து அரசாங்க உயர்பீடத்துக்குப் புகார் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏழு தமிழர்களின் மர்ம மறைவைத் தொடர்ந்து பாதுகாப்புப் படைகளில் ஒரு பிரிவைச் சேர்ந்த பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் தற்காலிக லீவில் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

இம் மாதம் 17ஆம் திகதி திருகோணமலையில் உள்ள மூதூர் பகுதியில் சுமார் 60 பேர் வரை பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் பெரும்பாலானோர் ஆலஞ்சேனை, ஆலங்கேணி, சூரன்கல், வானுறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள். அந்த அறுபது பேரில் ஏழு பேர் பற்றி பல நாட்களாக, எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. அவர்கள் எங்காவது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்களா என்பதை அறிய அவர்களின் உறவினர்கள் பல வழிகளிலும் முயன்றனர்.

ஆனால் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. அவர்கள் உயிடுரோ இருப்பதாகப் நம்கூடிய தான தகவல் எதுவும் கிடைக்கவுமில்லை.

எழுவரில் ஒருவரான அரசாங்க எழுதுவினைஞரை மீட்பதற்கு அவரது உறவினர்கள் முயன்றனர். பலனில்லை. அதனைத் தொடர்ந்தே அரசாங்க உயர்மட்டத்துக்குப் புகார் செய்யப்பட்டது.

7 பேரும் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அவர்களின் விஷயமாக உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விசாரணைக்கு முன்னோடியாக பதினைந்துக்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர்.

கொழும்பில் கொள்ளை

கொழும்பு, நவ. 30

கொழும்பு பஞ்சிகாவத்தையில் உள்ள பெற்றோல் நிலையம் ஒன்றில் நேற்று துப்பாக்கி முனையில் 10 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

ஒட்டோ ரிக்ஷோ ஒன்றில் வந்தவர்கள் காசாளரை மிரட்டிய பின் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகத்தில்
வீதித் தடை நீக்கப்பட்டது

சுன்னாகம், நவ. 30

சுன்னாகத்தில் கடந்த மூன்று நாட்களாக போடப்பட்டிருந்த வீதித் தடைகள் நீக்கப்பட்டன.

மறியல் போராட்டமும் கைவிடப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இரவு இனந்தெரியாத குழுவினரால் கொலை செய்யப்பட்ட இளைஞன் நடராசா குமரேசனின் மரணத்துக்கு உரிமை கோருமாறும் காரணத்தை தெரிவிக்குமாறும் கோரி யாழ். — காங்கேசன்துறை பிரதான வீதியில் பெரிய மதவடி அருகில் தடைகள் போடப்பட்டிருந்தன.

வியாழன் இரவு இணுவில் கந்தசுவாமி கோவிலடி வரை இத்தடைகள் விஸ்தரிக்கப்பட்டிருந்தன. இதனால் நேற்றுக் காலை சுன்னாகத்துக்கு ஊடாகச் செல்லும் சகல மினிபஸ்களும் சுன்னாகம் பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தன.

பாடசாலை மாணவர்கள் வருட இறுதிப் பரீட்சைக்கு தோற்ற முடியாது போனது பற்றியும் — அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமை புரிவோர் பணியகங்களுக்கும் — வர்த்தக ஸ்தாபனங்களுக்கும், செல்ல முடியாது போனது பற்றியும் மறியல் செய்வோரிடம் விரிவாக விளக்கப்பட்டது.

இதனை அடுத்தே மறியல் போராட்டத்தை கைவிடுவதெனவும்—தெருவில் போடப்பட்ட தடைகளை நீக்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

நேற்றுக் காலை ஒன்பது மணிமுதல் சேவைகள் வழமைக்குத் திரும்பின.

மூதூரில் இறந்தவர்களில் பலர் அன்றுடம் உழைத்து குடும்பம் நடத்தும் தொழிலாளர்

திருகோணமலை, நவ.30,

மூதூர் தொகுதியில் சம்பூர் கிராமத்தில் வியாழக்கிழமை நடந்த தேடுதலின் போது கொல்லப்பட்ட 21 தமிழ்ப் பொது மக்களில் வயோதிபர்களும் அடங்குகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பலியானவர்களில் பெரும்பாலோர் அன்றுடம் உழைத்து குடும்பம் நடத்தும் தொழிலாளர்கள்.

இதுவரை கிடைத்த இறந்தவர்களின் பெயர்கள் வயது விவரம் வருமாறு:-

சுப்பிரமணியம் சின்னையா–21, காங்கேசு அழகசுந்தரம்–32, பத்தினியன் துரைரத்தினம்–29, நற்சிங்கம் ஸ்ரீ–20, விநாயகமூர்த்தி துரைநாயகம்–38, வைரமணி சின்னராசா–23, செல்லத்துரை நவரத்தினராசா–25, செல்வராஜா கணேசலிங்கம்–27 பொன்னையா சிங்காரவேலு–22, செல்வராசா முருகன்–18, சண்முகம் அருள்–19, கோபாலபிள்ளை நவரத்தினம்–21, சின்னத்தம்பி சிவலோகமூர்த்தி–23, காங்கேசு கதிர்காமத்தம்பி – 40, கதிரமலை தங்கராசா–60, கனகரத்தினம் சிவம்–27, சிதம்பரம்பிள்ளை சின்னத்துரை–65, கோபாலசிங்கம் பிரேமராசா–22, கதிர்காமத்தம்பி கனகசிங்கம்–32, வைரமுத்து துரைராசசிங்கம்–22.

கொல்லப்பட்ட 21 பேரையும் தீவிரவாதிகள் என்று அரசு அறிவித்துள்ளது.

முச்சந்திமுரளி



ரயிலை அனுராதபுரத்தோடை நிறுத்த யோசிக்கினமாம். கொஞ்சக் காலத்திலை எல்லாத்தையும் அதே இடத்தோடை நிப்பாட்ட யோசிக்கிறம் எண்டு சொல்லுவினமோ, பின்னை!

சுபநேரம்

30- 11- 1985

சுபநேரம்:
3. 14 முதல் 4. 4 4வரை
ராகுகாலம்:
09.14முதல் 10.44 வரை

இன்று

யாழ்ப்பாணம், நவ. 30

கைதடி நவ்பீல்ட் பாடசாலையின் வருடாந்த கரோல் ஆராதனையும் கலை நிகழ்ச்சிகளும் இன்று காலை நவ்பீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

உதயனின் வாரஇதழ் சஞ்சீவி

பெற்றோலுடன் பவுசர் கடத்தப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 30

மட்டக்களப்பிலிருந்து பெற்றோலுடன் செங்கலடி நோக்கிச் சென்று கொண்டிருந்த பவுசர் ஒன்று இனம் தெரியாதவர்களினால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டது.

நேற்றுக்காலை இந்தச் சம்பவம் நடந்தது:-

சம்பவம் பற்றி அறியப்படுவதாவது,:-

சம்பவ தினம் மட்டக்களப்பிலிருந்து செங்கலடி நோக்கிச் சென்று கொண்டிருந்த பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பெற்றோல் பவுசரை செங்கலடிக்கு சிறிது அண்மையில் இனம் தெரியாதவர்கள் இருவர் துப்பாக்கி முனையில் வழிமறித்தனர்.

சாரதியையும் உதவியாளரையும் அவர்கள் இறக்கிவிட்டு பவுசரை அவர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

பவுசர் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து இலுப்படிச் சேனைப் பகுதியில் ஆயுதப் படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். மட்டக்களப்பில் பெற்றோல் பவுசர் கடத்தப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

வங்கியில் திருட முயற்சி

சுன்னாகம், நவ. 30

சுன்னாகம் மக்கள் வங்கியில் பட்டப்பகலில் திருட வந்த இருவர் வங்கி அதிகாரிகளிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் நடந்தது.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் மக்கள்வங்கியின் களஞ்சிய அறையினுள் புகுந்து முக்கிய சில குறிப்புக் கடதாசிகளையும் ஆணிகள், தகரங்கள், கம்பிகள் என்பனவற்றையும் இவர்கள் திருட முயன்றனர் என்று கூறப்படுகிறது.

சந்தேக நபர்கள்மீது விசாரணை நடத்த விடுதலை இயக்கம் ஒன்று சந்தேக நபர்களை அழைத்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும்போது

முஸ்லிம் கருத்துக்கு முக்கியத்துவம்

-ஜே. ஆர்.

கொழும்பு, நவ. 30

இலங்கை வாழ் முஸ்லிம்களின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தே இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

இப்படி உறுதியளித்திருக்கிறார் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன.

நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் தம்மைச் சந்தித்த முஸ்லிம் உயர்மட்ட தூதுக்குழுவிடமே அவர் இவ்வாறு கூறினார்.

தேர்தல் முறை மாற்றம் குறித்து தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக எட்டுப்பேர் கொண்ட முஸ்லிம்குழு ஒன்று நேற்று ஜனாதிபதியைச் சந்தித்தது.

கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் குழுவுக்கு தலைமை வகித்தார். மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூவ், பிரதி அமைச்சர் ஜனாப் ஜாபீர் ஏ. காதர் ஆகியோரும் குழுவில் இடம்பெற்றனர்.

"முஸ்லிம்கள் எனது நண்பர்கள். அவர்களுக்கு அரசியல் ரீதியில் எந்தத் தீங்கும் வர நான் அனுமதிக்கமாட்டேன்.

நான் உங்கள் பாதுகாவலன் என்னை நம்புங்கள். உங்களை என்றும் காப்பாற்றுவேன். இப்படி ஜனாதிபதி கூறினார்.

சமாதான குழு

யாழ்ப்பாணம், நவ.30,

பொதுநல சேவை சங்கத்தின் ஆதரவில் சமாதானக் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படுகிறது.

பொதுமக்கள் மத்தியில் ஏற்படும் பிணக்குகள் நீதிமன்றத்துக்கோ அல்லது பொலிஸுக்கோ போகாமல் மனிதாபிமான அடிப்படையில் இக் குழு தீர்க்கும்.

கிழக்கே காங்கேசன்துறை வீதியும் தெற்கே நாவலர் வீதியும் மேற்கே மானிப்பாய் வீதியும் வடக்கே ஐயனார் கோவில் வீதியும் உட்பட்ட பகுதியில் ஏற்படும் பிணக்குகள் சங்கத்தின் பரிசீலனைக்கு உள்பட்டதாகஇருக்கும்.

அனுராதபுரத்துடன் வடபகுதி ரயிலை நிறுத்த யோசனை

இந்த வருடம் 61 தாக்குதல்களாம்
ரூபா 10 கோடி நஷ்டம் எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் நவ.30

தீவிரவாதிகள் மீண்டும் வடபகுதி செல்லும் ரயில்களைத் தாக்கத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

இதன் காரணமாது வடபகுதி ரயில் சேவையை அனுராதபுரத்துடன் நிறுத்திவிடுவது குறித்க அரசு தீவிரமாக ஆலோசிக்கிறது,

பொதுசனத் தொடர்பு சாதனக் குழுத் தலைவர் கலாநிதி விக்ரம வீரசூரியா மேற்கண்டவாறு செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இவ் வருட ஆரம்பத்தில் இருந்து நவம்பர் 25 வரை வடபகுதி ரயில்கள் மீது தீவிரவாதிகள் 61 தாக்குதல் சம்பவங்களை நடத்தியுள்ளனர்.

இதனால் ரயில்வே திணைக்களத்திற்கு 10 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஜனவரி 19இல் முறிகண்டியில் இடம் பெற்ற தாக்குதலில் ரயில்வேக்கு 5 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

இக் கஷ்டங்களின் மத்தியிலும் அரசு ரயில் சேவையைத் தொடர்ந்தும் நடத்தி வந்தது.

எரிபொருள், மருந்து, உணவு முதலியன தட்டுப்பாடு இன்றி வடபகுதி மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற அக்கறை காரணமாகவே அரசு சேவையைத் தொடர்ந்து நடத்தி வந்தது.

நவம்பர் 24இல் பளையில் வைத்து எண்பதினாயிரம் ரூபா மருந்து வகைகள், அறுவைச் சிகிச்சை ஆடைகள் ரயிலில் கொண்டுவரப்படுகையில் கொள்ளையடிக்கப்பட்டன.

மீண்டும் பெரிய தாக்குதல் ஒன்றை வடபகுதி ரயில்கள் மீது நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அனுராதபுரத்துடன்வடபகுதி ரயில் சேவையை நிறுத்திவிட அரசு தீவிரமாக ஆலோசிக்கின்றது.

இப்படி செய்தியாளர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

கைதான 11 பேர்

மண்டூர். நவ. 30

கடந்த புதன்கிழமை மண்டூரில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின் போது 11 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

கே. ஏகாம்பரம் (வயது 22), அ. தவராஜா (வயது 25), இ. திருச்செல்வம் (வயது 23),ச. கந்தையா (வயது 35), கே. அரியநாயகம் (வயது 24), சி. பாலசுந்தரம் (வயது 12), த. இராசதுரை (வயது 17),, க. அரியநாயகம் (வயது 23), ந. தணிகாசலம் (வயது 38), சி. பத்மபிரகாஸ் (வயது 25), என். குணராஜா (வயது 30) ஆகியோரே கைது செய்யப்பட்ட பதினொருபேருமாவர்.

ஒரே சூலில் 3 குழந்தைகள்

மட்டக்களப்பு. நவ. 30

மட்டக்களப்பு காத்தான்குடி பாலமுனை வாசியான ராவியத்தும்மா (27 வயது) என்னும் பெண் ஒரே சூலில் 3 பெண் குழந்தைகளை பிரசவித்தார்.

இக்குழந்தைகளில் ஒரு குழந்தை பிறந்து சில மணி நேரத்தில் இறந்துவிட்டது. ஏனைய இரு குழந்தைகளும் தாயும் காத்தான்குடி வைத்தியசாலையில் நலமாய் உள்ளனர்.

மட்டக்களப்பு பார் வீதி சம்பவம்

பொலிஸ்காரரின் மனைவியும் புகார்

மட்டக்களப்பு, நவ. 30

மட்டக்களப்பு பார் வீதி கண்ணி வெடிச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடந்து கொண்ட விதம் தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மனைவியும் மட்டக்களப்பு பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளார்.

ஆயுதப் படையினர் தனது வீட்டுக்கு வந்த போது பயத்தால் மலசலகூடத்துக்குள் ஒளிந்து கொண்டதாக இப்பெண் தெரிவித்தார். சிங்களவரான இப்பெண்ணின் கணவர் ஓர் தமிழர் ஆவார்.

அதேநேரம் இராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டின் பின்வழியாகச் சென்ற படையினர் பெறுமதியான பொருட்களுக்கு தீ வைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் தமிழரான பிரஸ்தாப அதிகாரி தியத்தலாவையில் பயிற்சி முடித்து வெளியேறும் வைபவம் நடைபெற்றது. அவரின் பெற்றோர் தியத்தலாவை சென்றதால் வீட்டில் எவரும் இருக்கவில்லையாம்.

தற்போதைய சூழ்நிலையில்

அகதிகள் சொந்த இடங்களுக்கு திரும்புவது பாதுகாப்பானதல்ல

- நல்லூர் செய்தியாளர் க. இரத்தினராஜசிங்கம் -

நல்லூர், நவ. 30

இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்தவர்கள் தற்போதைய நிலையில் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வது பாதுகாப்பானதல்ல.

நேற்று இரண்டாவது நாளாக யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடந்த இடம்பெயர்ந்தோர் மாநாட்டில் கலந்து கொண்ட அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கா. விசுவலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றைய மாநாடு தமிழ் மகளிர் அவை பேச்சாளர் திரு. இரா. முருகையா தலைமையில் நடந்தது.

திரு. விசுவலிங்கம் மேலும் பேசுகையில், எமது கழகத்திற்கு வெளிநாடுகளில் இருந்து 13 கோடி ரூபா நன்கொடையாக கிடைத்திருக்கிறது. ஆனால் தற்போது அவர்கள் பணம் கொடுக்க மறுக்கிறார்கள். எங்கள் பணம் உங்கள் நாட்டில் எரிக்கப்படுகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஐந்து லட்சம் மக்களைத் தாங்கக்கூடிய எமதுகுடாநாடு பதினைந்து லட்சம் மக்களை தாங்கிக் கொண்டிருக்கிறது. அநேகமான இடம்பெயர்ந்தோர் டிசம்பர் 31-ம் திகதிக்குள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவது நல்லதல்ல என்று கூறினார்.

வண பிதா தி. தேவராசா உரை நிகழ்த்துகையில்,

கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்று வடபகுதி நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். வடபகுதியிலும் பிரச்சினைகள் உக்கிரமடைந்தால் அவர்களின் நிலை என்ன? எனவே அவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்வதற்கு அரசு மூலம் ஓர் தீர்வு காணப்படவேண்டும் என்று கூறினார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ஜீவிதாவின் புத்திமதி

"ஒரு பெண் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்வதற்கும், ஒரு நடிகை காதலிப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது" இப்படிக் கூறுகிறார் ஜீவிதா!

ஒரு நடிகை தன்னைக் காதலிப்பவன் பணத்திற்காகவா, அழகிற்காகவா, புகழுக்காகவா இதில் எதற்காக விரும்புகிறான் என்பதை முதலில் அறிய வேண்டும்.

ஒரு பெண் என்ற முறையில் மட்டும் தான் காதலிக்கிறான். மற்ற அடிப்படையில் அல்ல என்பதைத் தெரிந்து கொண்டு அவளும் சம்மதம் கொடுத்தால் அவர்கள் நட்பு பிரிக்க முடியாத அளவுக்கு வளருகிறது.

இப்படி சொல்கிறார் ஜீவிதா.

தினசரி சினிமா

'பாக்கியராஜ்' பெயரின் மர்மம்

பாக்யராஜ் வீட்டில் கடைசிப் பிள்ளை. அவருக்கு பெற்றோர் பாக்கியராஜ் என்று பெயர் வைக்கக் காரணம் என்ன தெரியுமா?

வீட்டில் செல்வம், தனம், பாக்கியம் மூன்றும் இருக்கவேண்டும் என்பதற்காக முதல் இருவருக்கும் செல்வராஜ், தனராஜ், என்றும் இவருக்கு பாக்கியராஜ் என்றும் வைத்துவிட்டார்களாம்

பபிதாவின் கவர்ச்சி!

ஸ்டன்ட் மாஸ்டர் ஜஸ்டினின் மகள் பபிதா. இவர் தெலுங்குப் படங்களில் படு "பிஸி" யாக இருக்கிறார். அதிகமான படங்களில் கவர்ச்சி நடனங்களில் தான் நடிக்கிறார்.

"என்னைப்போல் கேரக்டர் ரோல், கவர்ச்சி நடனம், ஸ்டன்ட் ஆகியவை தெரிந்த நடிகை யாரும் கிடையாது என்று என்னால் சவால் விட முடியும்" என்கிறார் பபிதா

அன்டாக்ரிக்கா பிரச்சினை

ஐ.நா. சபையில் ஆஸி-மலேசியா மோதல்

ஐ.நா. நவ. 29

1959இல் கைச்சாத்திடப்பட்ட அன்டாக்ரிக்கா ஒப்பந்தத்தில் அடிப்படை மாற்றங்கள் செய்யவேண்டும் என்று கோரி ஆஸ்திரேலியாவும் மலேசியாவும் மோதிக்கொண்டன.

இந்த மோதல் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் இடம்பெற்றது.

மிகவும் குளிரான அன்டாக்ரிக்கா கண்டம் மனித இனத்தின் பொதுவான இடமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று மூன்றாம் உலக நாடுகளின் சார்பில் மலேசியா வற்புறுத்தி வருகின்றது.

இந்த வற்புறுத்தலுக்கு எதிராக உடன்படிக்கையில் கையெழுத்திட்ட அமெரிக்காவும் ரஷ்யாவும் இயங்குகின்றன.

இது சம்பந்தமான விவாதம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரில் இடம்பெறுகின்றது.

வத்திக்கானிலும் அதிகாரப் பரவல் யோசனை
கத்தோலிக்க பிஷப் துணிச்சல்

வத்திக்கான்நகரம்நவ.29

வத்திக்கானிலும் அதிகாரப் பரவலாக்கல் செய்யப்பட வேண்டும் என்று யோசனை கூறப்பட்டுள்ளது.

ரோமன் கத்தோலிக்க பிஷப் ஒருவரே இத் துணிச்சலான யோசனையை வெளியிட்டுள்ளார்.

"சட்ட ஆக்க, நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட பிஷப்புக்கள் சபை ஒன்று நிரந்தரமாக நியமிக்கப்படவேண்டும். பாப்பாண்டவருடன் இணைந்து இச்சபை செயல்பட வேண்டும்"

இதுவே அந்த பிஷப் தெரிவித்த யோசனை.

இந்த யோசனை பிஷப்புக்கள் கொண்ட 'செனட்' ஒன்றை உருவாக்கும். ஆனால் இந்த அமைப்பு, பாப்பாண்டவரின் அனுமதியன்றி எதுவித உத்தரவையும் உருவாக்க முடியாது. பாப்பாண்டவரிடம் தான் இறுதி 'வீட்டோ' அதிகாரம் இருக்கும்.

பாப்பாண்டவரால் அழைக்கப்பட்ட கூட்டம் ஒன்றில்தான் ஆர்ப்பிஷப் மாக்ஸிம் ஹெர்மானியூக் அதிகாரப் பரவலாக்கல் யோசனையை வெளியிட்டார்.

கனடாவில் இக்கூட்டம் நடைபெற்றது. திருச்சபையில் என்னமாற்றங்கள் செய்யலாம் என்பது பற்றி மதிப்பீடு செய்யும் முகமாகவே இக்கூட்டம் பாப்பாண்டவரால் கூட்டப்பட்டது.

லொறியில் சென்ற கார் வழியில்அபகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணத்தில் இருந்து லொறியில் ஏற்றப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டகார் ஒன்று இடை வழியில் லொறியுடன் கடத்தப்பட்டது.

கார் உரிமையாளரான கோப்பாயைச் சேர்ந்த ஒருவர் இது தொடர்பாக பொலீஸில் புகார் செய்துள்ளார்.

கொழும்பில் விற்பதற்காக அனுப்பப்பட்ட இந்தக் கார் முறிகண்டியில் லொறியுடன் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டது.

பின்னர் லொறிமட்டும் முறிகண்டிக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஹிந்திமொழித் திணிப்பு உத்தரவு வாபஸ்

தமிழ்நாட்டின் எதிர்ப்புக்கு மத்திய அரசு பணிந்தது

புதுடில்லி, நவ. 29

இந்திய மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறும் சகல அமைப்புகளும் தமது அன்றாடக் கடமைகளில் ஹிந்தி மொழியையும் பயன்படுத்த வேண்டும் என்ற மத்திய அரசின் உத்தரவு வாபஸ் பெறப்பட்டது.

அண்ணா தி. மு. க. வும் தி. மு. க. வும் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்தே இந்த உத்தரவு இந்திய மத்திய அரசாங்கத்தினால் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது.

ஜவஹர்லால் நேருவும் இந்திராவும் அளித்த வாக்குறுதிகளை மேற்படி உத்தரவு மீறுவதாக இரு கட்சிகளும் தெரிவித்திருந்தன.

இது தொடர்பான கண்டன அறிக்கைகளை திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சார்பில் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எஸ். ராகவானந்தமும் தி.மு.க. சார்பில் அதன் தலைவர் திரு. மு. கருணாநிதியும் சென்னையில் விடுத்திருந்தனர்.

இந்திய நாடாளுமன்றத்திலும் இந்த இரு கட்சிகளாலும் இப்பிரச்சினை கிளப்பப்பட்டிருந்தது. இதனை அடுத்தே வாபஸ் அறிவிப்பு தற்போது வந்துள்ளது.

50 சதவீதத்திற்கு மேல் மத்திய அரசாங்கத்தின் மானிய உதவி பெறும் அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் தமது அலுவல்களை ஹிந்தி மொழியிலும் வைத்திருக்க வேண்டும் என்ற உத்தரவே தற்போது வாபஸ் பெறப்பட்டிருக்கின்றது,

லஞ்சம் ஊழல் வரி ஏய்ப்புக்கு சீனாவில் சிறை

பீகிங், நவ. 29

லஞ்சம், ஊழல், வரி ஏய்ப்பு நடவடிக்கைகளுக்காக 23 அரசாங்க அதிகாரிகளுக்கு சீன நீதிமன்றம் ஒன்று சிறைத் தண்டனை விதித்தது.

வானவெளியில் அட்லான்டிஸ் விண்கலம்

புளோரிடா, நவ 29

ஏழு விண்வெளி வீரர்களுடன் 'அட்லான்டிஸ்' என்ற பெயருள்ள விண்கலம் ஒன்று செவ்வாய் இரவு வானவெளிக்கு அனுப்பப்பட்டது.

விண்வெளி வீரர்களில் ஒருவர் மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்தவர்.

விண்கலம் கென்னடி விண்வெளி நிலையத்தில் இருந்து அனுப்பப்பட்டது. அச்சமயம் இரவு, பகலானது. அந்த நிகழ்ச்சியுடன் சேர்ந்து இடம்பெற்ற வாண வேடிக்கையே அதற்குக் காரணம்.

450 மைல் தூரம்வரை வாண வேடிக்கையைக் காணக் கூடியதாக இருந்தது.

ஒரு வாரகாலம் விண்கலம் வானவெளியில் உலாவரும். அச்சமயம் விண்வெளி வீரர்கள் விண்வெளியில் நடப்பர்.

இலங்கை - சீன உடன்படிக்கை

இலங்கை சீன கூட்டுப் பொருளாதார உடன்படிக்கை பேச்சுவார்த்தை கொழும்பில் ஆரம்பமாகியது.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் இலங்கைக்குழுவுக்கு நிதியமைச்சர் திரு. ரொனி. டிமெல் தலைமை வகிக்கிறார்.

சீனத் தூதுக்குழுவுக்கு சீன வர்த்தகத் துறைப் பிரதி அமைச்சர் தலைமை வகிக்கிறார்.

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி தேர்தல்

மணிலா, நவ 29

பிலிப்பீன்ஸ் நாட்டின் ஜனாதிபதி உபஜனாதிபதி தேர்தல்கள் 1986ஆம் ஆண்டு பெப்ருவரி 7ஆம் திகதி நடைபெற உள்ளன.

பிலிப்பீன்ஸ் நாடாளுமன்றம் இதற்கான சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றி உள்ளது.

ஆளும்கட்சியானபுதிய சமூக இயக்கம் தற்போதைய ஜனாதிபதி பெர்டினன்ட் மார்கோஸையே தனது ஜனாதிபதி வேட்பாளராக நியமித்துள்ளது

இத்தகவலை துணைப் பிரதமர் ஜொஸ்ரோனே தெரிவித்தார்.

ஜனாதிபதிப் பதவியில் திரு. பெர்டினன்ட் மார்கோஸ் 20 வருடங்களாக இருந்து வருகிறார்.

திருமணமா? சீனாவிலும் செலவுதான்

பீகிங், நவ 29

பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைப்பதில் பெற்றோர்கள் கடனாளியாகின்றனர்.

இது இங்கு மட்டுமல்ல மக்கள் சீனாவிலும் இந்த நிலைதான் ஏற்பட்டுவிட்டது என்று அதிகாரபூர்வமான தொழிலாளர் தினசரி செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு திருமணத்தை நடத்துவதற்கு 1,550 டாலர்கள் தேவைப்படுகிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த செலவிலும் பார்க்க இது இரண்டு மடங்கு.

தளபாடங்கள், டெலிவிஷன், உடைகழுவும் யந்திரம், தேன்நிலவு, ஒவ்வொரு கால நிலைக்கும் ஏற்ற உடுப்புகள் ஆகியவற்றிற்கு பெருஞ்செலவு செய்யவேண்டும்.

பெற்றோர்கள்தான் இச்செலவைப் பொறுப்பு ஏற்க வேண்டும். அல்லது மகன்மார் பெற்றோருடன் சண்டை இடுவர். மணப்பெண் வீட்டை விட்டு வெளியே செல்லமாட்டார். இப்படி அச்செய்தி கூறுகின்றது.

இதன் காரணமாக பெற்றோர்கள் அரசாங்க வேலைகளில் இருந்து இளைப்பாறிவிட்டு, தனியார் நிறுவனங்களில் கொழுத்த சம்பளத்தில் வேலைகளைத் தேடுவதாகவும் செய்தி கூறுகின்றது.

வெளி உலகில்

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் மீது கண்காணிப்பு

பென்டகன் கூறுகிறது

வாஷிங்டன், நவ. 29

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் மீது விசேட கண்காணிப்புச் செலுத்தப்படும்.

இப்படி பென்டகன் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

முக்கிய ராணுவ ரகசியங்களுக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிகளே விசேட கண்காணிப்புக்கு ஆளாவார்கள்.

சோவியத் யூனியனுக்காக உளவு பார்த்தார் என்பதை அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஏஜன்ஸியின் முன்னாள் ஊழியர் ஒருவர் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்தே இந்த உஷார் நடவடிக்கையை அமெரிக்க அரசு எடுத்துள்ளது.

ஐந்து தினங்களில் அமெரிக்காவில் அம்பலமான ஐந்தாவது உளவுச் சம்பவம் இது.

பாதுகாப்பு அமைச்சர் காஸ்பர் வீன்பெர்கரால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நடவடிக்கையினால், 50,000 இல் இருந்து 60,000 பேர்வரை பாதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் விலை ஏறிவிட்டது

லண்டன், நவ. 29

சர்வதேசச் சந்தையில் எண்ணெய்விலை அதிகரித்தது.

எண்ணெய்உற்பத்தி சம்பந்தமாக உற்பத்தி நாடுகளிடையே ஒற்றுமை ஏற்படாத பட்சத்தில் எண்ணெய் விலையில் பீப்பாய் ஒன்றுக்கு 20 டொலர்கள் வீழ்ச்சி அடையும் என்று சவூதி அரேபிய அமைச்சர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அந்தஎச்சரிக்கையையும் மீறி சர்வதேசச் சந்தையில் எண்ணெய்விலை அதிகரித்தது.

விமான கடத்தல் பின்னால் லிபியா
நேரடியாக அறிவித்ததாக முபாரக் கூறுகிறார்

கெய்ரோ, நவ. 29

விமானக் கடத்தலுக்கு பின்னால் இருந்த சக்தி லிபியா தான்.

இந்தச் சந்தேகத்தை லிபியாவிடம் நேரடியாகத் தெரிவித்து விட்டதாக எகிப்திய ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மோல்டாவிற்கு விமானத்தைக் கடந்த வாரம் கடத்திச் சென்றவர்கள் பலஸ்தீனியர்களே. அதற்குத் தலைமை தாங்கியவர் இப்பொழுது லிபியாவில் இருக்கின்றார். இப்படி எகிப்திய ஜனாதிபதி மேலும் சொன்னார்.

இந்தச் சம்பவத்திற்கு பின்னால் லிபியாதான் இயங்கியது என்பதை லிபியாவின் வெளிநாட்டு அமைச்சருக்கு தொலைபேசி மூலம் அறிவிக்கும்படி எனது வெளிநாட்டமைச்சரைக் கேட்டுள்ளேன்" — இப்படி ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

"கடத்தியவர்கள் பலஸ்தீனியர்கள். ஆனால் பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் — என்றும் ஜனாதிபதி சொன்னார்.

ஆனால் லிபிய அமைச்சர் இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

தொழிற் பயிற்சி நிறுவனம் மாணவருக்கு வரப்பிரசாதம்
திறப்பு விழாவில் உரை

காரைநகர், நவ 20

தொழில் நுட்பப் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமே மாணவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும். கனடா நாட்டு அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத் தொழிற் பயிற்சி நிலையம் வட பகுதி மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பல லட்சம் ரூபா செலவில் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை புதிதாக நிறுவியது.

இதனைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ் மறை மாவட்ட ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ் சென் பற்றிக்ஸ் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் கலாநிதி. ஜே. பி. சி. பிலிப்ஸ் தலைமையில் வைபவம் நடந்தது.

வைபவத்தில் யாழ் மறை மாவட்ட ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை தொடர்ந்து உரையாற்றுகையில் இளைய தலைமுறையினர் தாமே தமக்கு வேண்டிய தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு வசதியாக சென்பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்கள் இத் தொழிற் பயிற்சி நிலையத்தை நடத்தி வருகின்றார்கள் என்றார்.

ஜப்பானில் ரயில் சேவை குழம்பியது

டோக்கியோ, நவ. 30

ஜப்பானின் தேசிய ரயில் சேவை நேற்று முற்றாகக் குழம்பியது.

ஹெல்மேட் அணிந்த இடதுசாரி தீவிரவாதக் குழுக்கள் நடத்திய தாக்குதலே இதற்குக் காரணம்.

ரயில் சேவை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை எதிர்த்தே இத்தத் தாக்குதல் நடவடிக்கை.

ஜப்பானின் ரயில் நிலையங்கள், ரயில் பாதைகள் பல இடங்களில் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

தாய்லாந்து புரட்சி சதி வழக்கு

பாங்கொக், நவ 29

புரட்சி ஒன்றுக்கு தூபம் இட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 40 பேர் மீதான வழக்கு தாய்லாந்து நீதிமன்றத்தில் டிசம்பர் 4ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இந்த 40 பேரில் முன்னாள் பிரதமர் ஒருவரும் அடங்குகின்றார்.

தாய்லாந்தில் முடியாட்சி 1932இல் ஒழிக்கப்பட்டது.

அதன் பின்னர் 15 சதிகளும் சதிமுயற்சிகளும் தாய்லாந்தில் இடம்பெற்றுள்ளன.

நடைபெறவுள்ள நீதிமன்ற விசாரணை முடிவில் குற்றவாளியாகக் காணப்படுபவர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கும்படி அரசு தரப்பினர் கோரவுள்ளனர்.

சதிமுயற்சிகள் வருங்காலத்தில் இடம் பெறாமல் இருப்பதற்காகவே அரசு இந்தக் கடுமையான போக்கை மேற்கொள்கின்றது என்று அறிவிக்கப்படுகிறது.

புதுக்கணக்கு:

பெப்ரவரிக்கு 31 நாள்!

வழக்கமாக பெப்ரவரி மாதத்திற்கு 28 நாட்கள் தான். லீப் வருடமானால் பெப்ரவரிக்கு 29 நாள். ஆனால் சம்பளப் பட்டியலில் மோசடி செய்பவர்களுக்கு மட்டும் பெப்ரவரியில் 31 நாட்கள்.

என்ன அதிசயிக்கிறீர்களா?

கேரளத்தில் கிராமிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களின் சம்பளப் பட்டியலைத் தயாரித்தவர்களின் கணக்குத் தான் இது.

பெப்ரவரியில் 31 நாட்களுக்கு தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து சம்பளம் வழங்கியதாக கணக்குக்காட்டி மோசடி செய்திருக்கிறார்கள் இந்த பலே பேர்வழிகள்,

ஆனால் பாவம் பண ஆசையில் பெப்ரவரிக்கு 28 நாட்கள் என்ற கணக்கை மறந்ததினால் அகப்பட்டுக் கொண்டார்கள்.

அதுமட்டுமல்ல செப்டம்பர் மாதத்திலும் 31 நாட்களை இந்தப் பேர்வழிகள் கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

நீங்களும் வெளிநாடு செல்லலாம்!

- மேற்கு ஜேர்மனி
- பிரான்ஸ்
- இத்தாலி

எமது பிரதிநிதி உங்களைப் பாதுகாப்பாக இங்கிருந்து மாதம் இரு தடவை அழைத்துச் செல்வார்.

லிப்ருஸ் லிமிட்டெட்

R. G. கட்டடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

60, Sea Beach Road,
PETTAH.
T'Phone: 29148

மற்றும்

சகல விமான டிக்கட்டுகள், பாஸ்போட், பொண்ட், விசா என்பனவற்றிற்கும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

சுவை!
தரம் !!
தராதரம் !!!

குன்றுதது தோலகட்டி
தயாரிப்புகள்..
கடந்த 60 வருட காலமாக
மக்கள் மனதில் நிலைத்த பெயர்
தோலகட்டி தயாரிப்புகள்.

நெல்லி ரசம்
முந்திரிகை ரசம்
மாதுளம் ரசம்
நன்னாரி
மருத்துவ வைன்
மேசை வைன்
O.T.
மாங்காய் ஊறுகாய்
தேசிக்காய் ஊறுகாய்
புதிய அச்சாறு

சுவைத்து மகிழ இன்னும் பல.
மறந்துவிடாதீர்கள் விழாக் காலங்களை
இனிதே கழிக்க தோலகட்டி தயாரிப்புக்கள்.

ஏகப் பிரதிநிதிகளும் விநியோகஸ்தர்களும்:

ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்,
யாழ்நகர்.

புகப்பொலிவுடன் விளம்பரம் செய்ய உதயனை நாடுங்கள் புகப்பொலிவுடன் விளம்பரம் செய்ய உதயனை நாடுங்கள்

உதய சங்கற்பம்

காற்று மேகத்தை அடித்துச் செல்வது போலவே இறைவனது திருநாமம் நமது மனத்தைச் சூழ்ந்துள்ள உலகப் பற்று என்னும் மேகத்தை அழிக்கிறது.

-அன்னை சாரதாதேவி

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805 22073
30-11-85 த.பெ. 28

சரத்தின் நியாயக் குரல்

தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுங்கள். இந்த ஆணித்தரமான குரல், கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் ஒலித்தது. அது கலவானை எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகமவின் துணிகரக் குரல்.

தமிழ் இளைஞர்கள் பலர் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டும். எவர் மீதும் சந்தேகம் இருந்தால் குற்றப் பத்திரங்களைத் தாக்கல் செய்து அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.

அதுவே திரு. சரத்தின் கோரிக்கை. அது நூற்றுக்கு நூறு வீதம் நியாயம் நிறைந்தது. இதுபோன்ற கோரிக்கை ஏற்கனவே பல தடவைகள் தமிழ் மக்களால் விடுக்கப்பட்டது. பிரசைகள் குழுக்கள் மற்றும் ஸ்தாபனங்கள் இது சம்பந்தமாகத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியை நேரில் சந்தித்துக்கூட விளக்கின.

இறுதியில் தமிழ்ப் பகுதிகளில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், உண்ணாவிரதம் என்பனவும் மிகப் பரந்த அளவில் நடந்தன. அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் அவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்குச் சத்தங்களாகவே இருந்துவிட்டன.

ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பலமாத காலமாகச் சிறையில் வாடுகிறார்கள். அவர்கள் படும் சித்திர வதைகளும் அனந்தம். எழுத்தில் வடிக்க முடியாதவை. நாகரிக சமுதாயம் ஏற்றுக்கொள்ள முடியாத இந்த அநீதியைத் தட்டிக் கேட்க எவரும் இல்லை என்ற இறுமாப்பு அதிகார பீடத்துக்கு.

வெளி உலகத்துக்கு வேறுவிதமாகக் காட்டுவதற்குப் பல புனை காரணங்களைத் தொகுத்து தனது நிலையைச் சரிப்படுத்தி வருகிறது அரசு. தமிழ் மக்களின் உரிமைக்குரலை அடக்க எத்தனையோ தந்திரங்களைக் கையாண்டும் வருகிறது.

அவற்றுள் மிகவும் பொதுவானது தமிழ் இளைஞருக்கும் மார்க்சிசத்துக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள முடிச்சு. அந்த முடிச்சைக் காட்டி முதலாளித்துவ நாடுகளின்'' ஆதரவையும் அன்பையும் பெறுவது முதல்நோக்கம். அந்த ஆதரவோடு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் ஆட்சிக் காலம் வரை இழுத்தடிப்பது உள் நோக்கம்.

பௌத்த தர்மம் பேசப்படும் ஒரு நாட்டில் நாகரிக உலகம் வெறுக்கும் அநீதிகள் நடப்பது தகுமா?

தமிழர்களின் குரல் வளை நசுக்கப்பட்டுவிட்டது. எனினும் அவர்களுக்கு இழைக்கப்படும் அநியாயங்களை வெளி உலகத்துக்குப் ''புட்டுக் காட்ட'' ஒரு சரத் குரலாவது இருக்கிறதே. என்று திருப்திப்படலாம்.

அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழர்களின் கண்கள் குருடாகி விட்ட போதிலும்—குரல்கள் அடைக்கப்பட்டுவிட்ட போதிலும் சரத் போன்றவர்களின் நியாயக் குரல் எங்களுக்கு அபயக் குரலே.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் பறிபோகிறது

அரசு தந்த புள்ளிவிவரமே அதனை மிகத் தெளிவாக்குகிறது

மகாத்மாவின் பேரன் ராஜ்மோகனின் இலங்கை நோக்கு

சிங்களவர்களின் உரிமைகள் அநாதியானவை. அடிப்படையானவை. ஆனால் தமிழரின் உரிமைகளோ சிங்களவர் கொடுக்கும் அன்பளிப்பில் உள்ளது. இந்த நிலையைத் தமிழர்கள் முற்றாகவெறுக்கிறார்கள்.

இலங்கைப் பிரச்சினையுடன் தொடர்புடைய இதுபோன்ற பல கருத்துக்களை நாம் கவனிக்கத் தவறி விட்டோம். இவற்றை ஆராய்வது அவசியம்.

சிங்களப் பெரும்பான்மையினரின் அனுமதியின் பேரில்தான் தமிழர்கள் தமது ஜனநாயக உரிமைகளை அனுபவிக்கலாம். இந்த நிலையைத் தமிழர்கள் ஏற்க மறுக்கிறார்கள்.

''இந்த நாடு அன்றும் இன்றும் எம்முடையது. எமது இரக்க உணர்வினால் நாம் உங்களைச் சகித்துக் கொள்ளத் தயாராயுள்ளோம்'' – இது பல சிங்களவர்களின் மனோநிலை. சிலர் வெளிப்படையாகவே இதைக் கூறுகிறார்கள்.

சிங்களப் பெற்றோர் தெரிந்தோ தெரியாமலோ இத்தகைய மனோநிலையைத் தமது பிள்ளைகளுக்குத் தலைமுறை தலைமுறையாக ஏற்படுத்தி வருகிறார்கள்.

படித்தவர்கள், படியாதவர்கள், ''உயர்ந்த'' சாதி, ''தாழ்ந்த'' சாதி என்று சிங்கள இனத்தின் சகல மட்டங்களிலும் இம்மனோ நிலை நிலவுகிறது. இத்தகைய மனோநிலை காரணமாக அரசியல் தீர்வுகள் காணப்படுவது சிக்கலடைவதை நாம் இந்தியாவில் பார்த்து இருக்கிறோம்.

கிழக்கில் சிங்களவர்

கிழக்கு மாகாணத்தின் சனத்தொகையில் இன ரீதியாக ஏற்பட்டு வரும் மாற்றங்கள் இலங்கைப் பிரச்சினையின் முக்கிய அம்சம் ஆகும்.

1946ஆம் ஆண்டில் கிழக்கில் 8.4 சத வீதமாக இருந்த சிங்களவர்களின் எண்ணிக்கை 1981இல் 24.9 சதவீதமாக அதிகரித்தது. இப்போது அவ்விகிதாசாரம் ஒருவேளை மேலும் அதிகரித்து இருக்கலாம்.

இடம்பெயர்ந்து குடியமரும் உரிமை ஜனநாயக நாடுகளில் மக்களுக்கு உண்டு என்பது உண்மை. இருப்பினும், பிராந்திய ரீதியாக மக்கள் தமது மொழி, இன கலாசார உரிமைகளைப் பேணும் உரிமையை பல நாடுகள் அங்கீகரித்துள்ளன.

இந்தியாவின் திரிபுரா மாநிலம்வங்காள மொழி பேசுவோரின் பெரும்பான்மைப் பிரதேசமாக உருவெடுக்கும் ஆபத்து இருந்ததால் இந்தியாவின் வடகிழக்கில் அச்ச உணர்வுகள் வளர்ந்தன.

வெளிநாட்டார் வருவது மட்டுமல்ல வடகிழக்குப் பிராந்திய மக்களின் கவலை.

அஸ்ஸாம், மேகலாய நாகலாந்து, மிஸோரம், மணிப்பூர் திரிபுரா அருணாச்சல் ,மாநில மக்கள் தமது மொழி கலாசாரம் இந்திய நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து வரும் மக்களின் தாக்கத்தினால் பாதிப்படையக் கூடாது என்று கருதுகிறார்கள்.

இந்தியாவின் வட கிழக்கு மாநில மக்களின் அபிலாஷைகளை இந்தியாவின் ஏனைய பிரதேசங்கள் புரிந்து கொண்டு அங்கீகரித்தும் உள்ளன.

சிங்களப் பெரும்பான்மையினர் கிழக்கு மாகாணத் தமிழர்களின் நியாயமான அச்சத்தைப் புரிந்து கொண்டு அங்கீகரிக்க முன்வருகிறார்களா? வேறு மாகாணத்தில் குடியேறி வாழ ஒரு தனி மனிதன் விரும்புவது நியாயமானது. ஆனால்,திட்டமிட்டுநிதி வழங்கி, ஊக்கமளித்து பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியமர்த்துதல் தமிழர்களின் அச்சத்தையும் சீற்றத்தையும் தூண்டவே உதவும்.

இதனையே இலங்கை அரசு பல ஆண்டுகளாகச் செய்துள்ளது.

இனவாதகுடியேற்றம்

கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியான திருகோணமலையில்தான் இந்தகைய இனவாதக் குடியேற்றம் உச்ச நிலையில் உள்ளது.

திருகோணமலையில் இப்போது மூன்றில் ஒரு பங்கினர் சிங்களவர்கள். முஸ்லிம்கள் தமிழர்களிலும் பார்க்க அரைப் பங்கிலும் சற்றுக்குறைவு. இலங்கை முஸ்லிம்கள் தமிழ்மொழி பேசுகின்றனர். என்றாலும் இந்து சமயத்தைத் தழுவும் தமிழர்களுக்கும் அவர்களுக்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்படவில்லை. தங்களில் 70சத வீதமானோர் சிங்களப்பகுதிகளில் வாழ்வதால், அவர்கள் சிங்களவர்கள் நிலைப்பாட்டினை ஆதரித்து வந்துள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தின் வடக்கு பக்கமாக மூன்றிலொரு பகுதியில் திருகோணமலை மாவட்டம் உள்ளது. கீழே மட்டக்களப்பு மாவட்டமும் அதற்குத் தெற்கே அம்பாறை மாவட்டமும் உள்ளன.

1981 ஆம் ஆண்டு குடிசனத் தொகை மதிப்பீடு பின்வரும் விபரங்களைத் தந்துள்ளது.

திருகோணமலை:

சிங்களவர்கள் 85,341, தமிழர்கள் 86,743 முஸ்லிம்கள் 74,403, இந்தியத் தமிழர்கள் 6,767.

மட்டக்களப்பு:

சிங்களவர்கள் 10,646 தமிழர்கள் 2,34, 348 முஸ்லிம்கள் 79,317 இந்தியத் தமிழர்கள் 3,868

அம்பாறை:

சிங்களவர்கள்1,46,371 தமிழர்கள் 78,315 முஸ்லிம்கள் 161, 481 இந்தியத் தமிழர்கள் 1,410

கிழக்கு மாகாணம்-மொத்தம்:

சிங்களவர்கள்243,358 தமிழர்கள் 3,99,406 முஸ்லிம்கள் 315,201இந்தியத் தமிழர்கள் 12,045

முஸ்லிம்கள்பெருந்தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது இப்புள்ளிவிபரங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம். இந்து – முஸ்லிம் நல்லுறவு இன்றி கிழக்கு மாகாணம் தமிழர் தாயகமாக அமைய முடியாது. இவ்வாறு இணைந்த பின்னும் அரசியல் ரீதியாக உறுதிப்பாடு இருக்கவும் முடியாது.

1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி கிழக்கு மாகாணத்தில் உள்ள 12 தேர்தல் தொகுதிகளில் நான்கை மட்டுமே வெல்ல முடிந்தது. முஸ்லிம் – சிங்கள உறவே இதற்குக் காரணம்.

வடமாகாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி 14 தேர்தல் தொகுதிகளில் வெற்றி பெற்றது. 1981ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின்படி வடமாகாண நிலை வருமாறு:–

சிங்களவர்கள் 3.0. தமிழர் 92.1. முஸ்லிம் 4.7.

வடமாகாணத்தில் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் சிங்களவரைக் குடியமர்த்த அண்மைக் காலத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. தமிழர் சுயாட்சியைப் பொறுத்தளவில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

முஸ்லிம்களின் நிலைப்பாட்டுக்கு பணயப் பிரச்சினையும் காரணமாக இருக்கலாம், கொழும்பு கண்டி, குருநாகல், புத்தளம் பகுதிகளில் வாழும் தமது சகோதரர்களின் நிலை பற்றி கிழக்கு மாகாண முஸ்லிம்கள் கவலை அடைந்து உள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் எண்ணிக்கை 10.56,972 இவர்களில் 7,41,771 பேர் சிங்களப் பெரும்பான்மைப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

வேறு காரணிகளும் உண்டு என்பதையும் உணரலாம் இந்தியாவில் நிலவும் இந்து முஸ்லிம் உறவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

பணயக்காரணி என்று நாம் அழைக்கும் பிரச்சினை பல தமிழர்களையும் கவலை அடையச் செய்துள்ளது. 18,71,535 இலங்கைத் தமிழர்களில் ஐந்து லட்சத்துக்கு அதிகமானோர் (5,14,332 பேர்) வடகீழ் மாகாணங்களுக்கு வெளியே வசிக்கிறார்கள்.

இந்தியபடையினருக்கு இலங்கையைக் கைப்பற்ற பத்து மணித்தியாலங்கள் செல்லுமானல் சிங்களப் பகுதிகளில் பணயமாக வாழும் ஐந்துலட்சம் தமிழர்களைக் கையாள ஐந்து மணித்தியாலங்கள் போதுமானவை என்று கூறப்படும் சிங்களக் கூற்று இதனால் எழுந்திருக்கலாம்.

1981-இல் கொழும்பில் 165,952 இலங்கைத் தமிழர்கள், 21,504 இந்தியத் தமிழர்கள் இருந்தனர். கண்டி, நுவரேலியா, புத்தளம், கம்பஹா, பதுளை மாவட்டங்களில் பெருந்தொகையான தமிழர்கள் உள்ளனர்.

எதிர்காலத்தில் இப்பகுதித் தமிழர், பாதுகாப்புக் கருதி தமிழ் பிரதேசத்துக்குக் குடிபெயர வேண்டும் அல்லது தமிழ் –சிங்கள ஒப்பந்தம் வழங்கும் பாதுகாப்பில் தங்கி இருக்க வேண்டும்.

இந்திய வம்சாவளி

இந்திய வம்சாவளித் தமிழர்கள் 825,000பேர் உள்ளனர். மட்டக்களப்பு, யாழ்ப்பாணப் பகு

[4-ம் பக்கம்] பார்க்க]

திரு. ராஜ்மோகன் காந்தி, அண்ணல் மகாத்மாகாந்தியின் பேரன். ராஜாஜியின் பேரனும் கூட. 'ஹிம்மத்' பத்திரிகையின் ஆசிரியராகவும் பணிபுரிகின்றார்.

தார்மீக புனருத்தாரண இயக்கத்தின் தாபகரும் ஆவார்.

அப்படிப்பட்டவர் இலங்கைஇனப்பிரச்சினையில் கவனிக்கப்படாத சில அம்சங்கள் பற்றி இக் கட்டுரையில் அலசி ஆராய்ந்துள்ளார்.

இக்கட்டுரை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தினசரியில் வெளியானது.

பொய்யாமொழி

வேண்டுதல்
வேண்டாமை
இலான் அடி
சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை
இல.

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

முற்போக்கு நாவல் படைப்பதற்கு தேவையானது எது?

வெளியீட்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், நவ 30

நிஜமான கதாபாத்திரங்களை உடையதால் மட்டும் ஒரு நாவல் முற்போக்கு நாவல் ஆகிவிட முடியாது. அக் கதாபாத்திரங்கள் ஊடாக முற்போக்குச் சிந்தனை பிரதிபலிப்பது அவசியம் அதன் மூலம் சமூகத்தில் உரிய தாக்கம் ஏற்பட வேண்டும்.

எழுத்தாளர் கே.டானியலின் ''அடிமைகள்'' நாவல் வெளியீட்டு விழா நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற்றது.

அதில் கருத்துரை வழங்கிய திரு. வி. சின்னத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

கலை இலக்கியப் பத்திரிகை நண்பர் கழகம், மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம் பூபாலசிங்கம் புத்தக நிலையம் ஆகியவை இணைந்து நடத்திய இவ் விழாவுக்கு திரு. க. சொக்கலிங்கம் தலைமை வகித்தார்.

திரு. வி. சின்னத்தம்பி தொடர்ந்து கூறியதாவது:

இடதுசாரிச் சிந்தனைகளால் ஆகர்சிக்கப்பட்டு முற்போக்குக் குழாமாக பலர் எழுத்துத்துறையில் ஈடுபட்டனர். முற்போக்கு கருத்துக்களை வளர்த்தனர்.

அத்தகைய அடிச்சுவட்டில் நீண்ட காலமாக அரசியல், சமூக, பிரதேச நெருக்கடிகளின் மத்தியிலும் கொள்கை உறுதிப்பாட்டுடன் திரு. டானியல் இலக்கியப் பணி ஆற்றுகிறார்'' இப்படி அவர் கூறினார்.

''யாழ்ப்பாண சமூக வாழ்க்கையில் ஒரு வேளை புறவடிவத்தில் சாதிக் கொடுமை இல்லை என்று தோன்றினாலும், உள்ளூர இருக்கத்தான் செய்கிறது. இந்த நாவலில் காணப்படும் சம்பவங்கள் அப்பட்டமான உண்மைகள்'' என்று திரு. கே. தங்கவடிவேல் பேசுகையில் தெரிவித்தார்.

வெளியீட்டுரை வழங்கிய கலாநிதி அ. சண்முகதாஸிடமிருந்து சட்டத்தரணி திருமதி. லிங்கா ராஜன் முதற் பிரதியைப் பெற்றார்.

நாவலாசிரியர் கே. டானியல் தமது பதிலுரையில் பின்வருமாறு கூறினார்.

''அடிமைகள்'' நாவல் எழுத முன்னர் நான் நாவலின் பின்னணி, பாத்திரங்கள் அவர்கள் உலாவிய இடங்கள், வாழ்ந்த வீடு வாசல்கள் ஆகியவற்றை நேரிற் சென்று பார்த்தேன். தகவல்களைச் சேகரித்தேன். இது பலநாள் முயற்சி. எனக்காக அன்றி சமூக வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக இப்பணியில்ஈடுபட்டேன் என்றார்.

உலக தமிழ் பண்பாட்டு மாநாடு

டிச. 13 இல் சேலத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 30

3ஆவது உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாடு சேலம் நகரில் டிசம்பர் 13, 14, 15 ஆம் திகதிகளில் நடைபெறும்.

சேலம் தமிழ்ச் சங்கத்தில் இம் மாநாடு நடைபெறும்.

1974 இல் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் முதல் மாநாட்டை சென்னை மாநகரில் 1977 இலும் இரண்டாவது மாநாட்டை மொரிஷியஸ் நாட்டில்1980இலும் நடத்தியது.

சேலம் மாநாட்டில் கலைஞர் மு. கருணாநிதி, குன்றக்குடி அடிகளார், பேராசிரியர் க. அன்பழகன், பொள்ளாச்சி நா. மகாலிங்கம், முன்னாள் நீதிபதி எம். எம். இஸ்மாயில், காந்தி காமராஜ், காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், ஜனதா தலைவர் இரா. செழியன், திருக்குறள் முனுசாமி, அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், முத்தமிழ்க்காவலர் கி. அ. பெ. விசுவநாதன், அமைச்சர்கள் க. இராசாராம், திருமதி விஜயலட்சுமி பழனிசாமி, டாக்டர் சாலை இளந்திரையன், காமராஜ் காங்கிரஸ் தலைவர் ப. நெடுமாறன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளனர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்திற்கு 30 நாடுகளில் கிளைகள் உள்ளன.

40 நாடுகளைச் சேர்ந்த 1000 பேருக்கு மேல் மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாநாட்டு நோக்கங்கள் வருமாறு:

1. தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட உலகத் தமிழர்களை அந்தந்த நாட்டுக் குடிமக்களாக ஆங்காங்கே வாழும் உரிமைகளைப் பேணும்படி ஊக்கமூட்டுவது,
2. தாய்மொழியை அந்த அந்த நாடுகளில் பேச, படிக்க, எழுத ஊக்க மூட்டுவது, இழந்த தாய் மொழித் தமிழைப் பாதுகாத்தல்,
3. ஐ.நா. கொள்கைப் படியே மனித உரிமைகளுக்குப் போராடுதல், சிறுபான்மை இன மக்களின் பண்பாட்டுக் கலாசார நலன்களை வளர்த்தல்
4. வாழும் நாடுகளில் தமிழ்க்கல்வி, தமிழ் மொழி, தமிழ் நாகரிகம், தமிழப் பண்பாடு, தமிழ் இலக்கியம் ஆகிய உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் தமிழகம் இந்தியாவில் இருந்து பெறுவது,
5. மாநாடு அரசியல், மதம் எதிலும் சாராது எந்த உள்நாட்டு அரசியலிலும் தலையிடாது உலகத்தமிழர்களை ஓரிணைப்பாகச் செய்வது பலஇன மக்களிடையே ஒருமைப்பாடுகளை வளர்ப்பது.

மகஜர் கையளிக்க தயாரான சமயம் பொலீஸ் தாக்குதல்

மட்டக்களப்பு ஊர்வலம் கலைப்பு பற்றி பிரஜைகள் குழுமுன் வண, பிதா சாட்சியம்

- மட்டக்களப்பு செய்தியாளர் இரா. உதயகுமார் -

மட்டக்களப்பு நவ. 30

மட்டக்களப்பில் அமைதியாக நடைபெற்ற ஊர்வலம் பொலீஸ் நிலையத்தை அடைந்ததும் இருவர் சென்று பொலீஸ் அதிபரிடம் மகஜரைக் கையளிக்க தயாராகினர். அந்நேரத்தில் அங்கிருந்த பொலீஸார் துப்பாக்கி வேட்டுக்கள், கண்ணீர்ப் புகை மூலம் ஊர்வலத்தை கலைத்தனர். இதனால் பலர் மயக்கமுற்றனர்.

மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் வாராதந்த கூட்டத்தில் மேற்படி ஊர்வலம் கலைப்பு தொடர்பாக ஆராயப்பட்டது.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட வண. பிதா சந்திரா பெர்னாண்டோ தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை அப்போது மேற்கண்டவாறு விவரித்தார்.

குழு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் இது பற்றி மேலும் விவரிக்கையில், அப்பாவிகள் கைது, படுகொலை, வீடுகள் தீவைப்பு, உடைமைகள் சேதம் ஆகிய படையினரின் கெடுபிடிகளை ஆட்சேபித்து மாணவ மாணவிகளும், பொதுமக்களும் இந்த ஊர்வலத்தை ஒழுங்கு செய்தனர்.

இருதயபுரத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் நான் கலந்து கொண்டேன். எமது ஊர்வலம் கிழக்கு பிராந்திய பொலீஸ்மா அதிபர்அலுவலகத்துக்கு அருகாமையில், வைத்தியசாலை சந்தியிலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தை எதிர்பார்த்து நின்றது.

சில நிமிடங்களில் அந்த ஊர்வலம் வந்தபோது எமது ஊர்வலமும் இணைந்து பொலீஸ்மா அதிபர் அலுவலத்தை கடந்து அருகிலுள்ள பெற்றோல் நிலைய வாசலில் நின்றது. பொலீஸ் அதிபரிடம் இருவர் சென்று மகஜரை கையளிக்கத் தயாராகினர்.

அந்நேரம் பொலீஸ் நிலையத்திலிருந்து வெளியே வந்த ஆயுதப்படையினர் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசினர். துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். சுலோக அட்டைகளைப் பறித்து மக்களைத் தாக்கினர். சைக்கிள் டயர்களால் மக்களை அடித்தனர். மதகுருமார்களை கூடத் தாக்கினர்.

பலர் மயக்கம் போட்டு விழுந்தனர். மாணவிகளும் பெண்களும் சிதறி ஓடியபோது பலர் கீழே விழுந்தனர் சில மாணவிகளின் சட்டைகள் கிழிந்தன.

ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் இச்சம்பவத்தையடுத்து உணர்ச்சி வசப்பட்டவர் அந்த இடத்தை விட்டு அசைய மாட்டோம் என்று சத்தமிட்டனர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட மதகுருமார் ஆறுதல் கூறி சமாதானம் செய்து அவர்களை அனுப்பி வைக்கவேண்டியதாயிற்று.

வைத்திய சாலையிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் அவ்வழியே வந்த அதிரடிப் படையினரால் தடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் எதுவும் செய்யவில்லை. சுலோக அட்டைகளை மட்டும் பறித்துச் சென்றனர். இப்படி அவர் கூறினார்.

சடலம் வந்தது

கடந்த செவ்வாய்க்கிழமை புனானைக்கு அண்மையில் படுகொலை செய்யப்பட்ட நான்கு தமிழரில் இருவரின் சடலங்கள் நேற்று மட்டக்களப்பு வந்து சேர்ந்தன.

பொலனறுவைப் பொலீசார் உதயதேவி ரயில் மூலம் இச் சடலங்களை மட்டக்களப்புக்கு அனுப்பிவைத்தனர். அங்கு உறவினர்கள் சடலத்தை பொறுப்பேற்றனர்.

இதே வேளை இச் சம்பவத்தில் உயிரிழந்த நான்காவது நபர் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த லூகாஸ் ராஜா (வயது 26) என அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

இதேசம்பவத்தில் காயமடைந்த இவரது சகோதரர் பில்ரன் ராஜா (வயது 24) கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி
வகுப்பு வரையிலான சகல
புத்தகங்களுக்கும்
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
தந்தி: BOOKS தொலைபேசி: 23631

உதயன்
30 – 11 – 1985

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள்
1986ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள்,
டயறி வகைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
தந்தி: BOOKS தொலைபேசி: 23631

யாழ். பெரியாஸ்பத்திரி ஸ்தம்பித நிலையில்!

மருந்து இல்லை; இரத்தம் இல்லை; டாக்டர்கள் இல்லை

— வனிராஜ் —

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி முழு ஸ்தம்பித நிலைக்கு வந்துள்ளது.

மருந்து,
இரத்தம்,
டாக்டர்கள்,
நிபுணர்கள்,
தாதிமார்,
அம்புலன்ஸ் —
எல்லாமே யாழ். ஆஸ்பத்திரியில் தட்டுப்பாடாக உள்ளதாக வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சுரேந்திரன் நச்சினார்க்கினியன் 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரியின் அவல நிலைமைபற்றி வைத்திய அத்தியட்சகர் விபரித்துச் சொன்னார்.

டாக்டர் நச்சினார்க்கினியன் சொன்னதாவது:

சத்திர சிகிச்சைக்குத் தேவையான பிராணவாயு, மயக்க மருந்துக்குத் தட்டுப்பாடு இருந்து வருகிறது.

கையிருப்பில் உள்ளதை வைத்தே அவசர சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலை நீடிக்குமானால் பெரும் அபாயங்களை எதிர்நோக்க நேரிடும்.

வெளிநோயாளர் பகுதியில் 22 டாக்டர்கள் கடமையாற்ற வேண்டும். ஆனால் 8 டாக்டர்களே கடமை புரிகின்றனர்.

வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை. இதனால் நிபுணத்துவ சிகிச்சை பெறவேண்டிய நோயாளிகள் படும் கஷ்டங்களைச் சொல்ல முடியாது உள்ளது. எலும்பு சம்பந்தமான சிகிச்சை நிபுணர் கிடையாது.

இரத்த வங்கி, பெயருக்குத்தான் உள்ளது. அவசர தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவு இரத்தம் வங்கியில் இல்லை. தாமாகவே முன்வந்து இரத்தம் கொடுக்க மக்கள் பின் நிற்கின்றார்கள்.

ஆஸ்பத்திரிக்கு 350 தாதிமார் தேவை. ஆனால் 240 பேரே தற்சமயம் கடமையாற்றுகின்றனர்.

கொழும்பில் இருந்து வரவேண்டிய மருந்து வகைகள் இன்னமும் வந்து சேரவில்லை.

விசர் நாய்க் கடி சிகிச்சைக்குத் தேவையான மருந்து இன்னமும் வந்து சேரவில்லை.

இதனால் பல உயிர்களைக் காப்பாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எக்ஸ்ரே எடுப்பதற்குத் தேவையான பிலிம்கள் போதுமான அளவு கைவசம் இல்லை. இருக்கும் பிலிம்கள் அவசரத் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

தமிழர்...

திகளில் தமிழர்கள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக எதிரொலித்த சிங்கள வன்செயல்களால் இவர்கள் கடந்த காலங்களில் பலதடவைகள் பாதிப்பு அடைந்தனர். இவர்களில் 75,000 பேர் மட்டுமே வடக்கு–கிழக்கு மாகாணங்களில் வசிக்கிறார்கள். அதனாலே தான் திரு. தொண்டமான் "தமிழ் ஈழத்தை ஆதரிக்கிறேன். ஆனால் அது எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு அது அல்ல" என்று கூறுகிறார்.

பத்து லட்சம் சிங்களவரில் 2,76,507 பேர் மட்டும் தமிழ் பகுதிகளில் வாழ்கிறார்கள்.

பிரஜைகள் குழு இன்று கூடுகிறது!

சுன்னாகம், நவ. 30

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் விசேஷ செயற்குழுக் கூட்டம் இன்று மாலை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கொலை செய்யப்பட்ட இளைஞன் நடராசா குமரேசனின் விவகாரம் உட்பட பல முக்கிய விடயங்கள் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

திருமலை அகதிகளுக்கு உணவுப் பங்கீடும் நிறுத்தப்படுமா?

நல்லூர், நவ. 30

யாழ்ப்பாணம் வந்துள்ள திருகோணமலை அகதிகளுக்கு டிசம்பர் 15ஆம் திகதிக்குப் பின்னர் உணவுப் பங்கீட்டு பொருள்கள் வழங்கப்படுவது நிறுத்தப்படலாம் என தெரிகிறது.

திருகோணமலையில் நிலைமைவழமைக்கு திரும்பும் பட்சத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பங்கீட்டுப் பொருள்கள் நிறுத்தப்படலாம் என்று நேற்றைய இடம்பெயர்ந்தோர்மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

தேடுதல் வேட்டையில் கோயில் சேதமானது

மண்டூர், நவ. 30

கடந்த புதன் கிழமை மண்டூரில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டை நடத்திய போது மண்டூர் கந்தசுவாமி கோயிலுக்கும் சிறு சேதம் ஏற்பட்டது.

கதிர்காம பூசையைப் போன்றே மண்டூர் கந்தசுவாமி கோயிலும் மூலஸ்தானத்தை மூடிகப்புருளை பூசை செய்வது வழக்கம்.

இந்த மூலஸ்தான கதவே சேதப்படுத்தப்பட்டது.

தேடுதல் வேட்டையின்போது கொல்லப்பட்ட கே. வேலுப்பிள்ளையின் வீட்டில் இரண்டரைப் பவுண் சங்கிலியும், 1300 ரூபா பணமும் சூறையாடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சில கடைகளும் கொள்ளையிடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அகதிகளுக்கு தமிழ்நாட்டில் 200 வீடுகள்

சென்னை, நவ. 29

இலங்கையில் இருந்து தமிழகம் வரும் அகதிகளுக்காக 200 வீடுகளை தமிழக அரசு மண்டபம் முகாமில் அமைத்துக் கொடுக்கும்.

1 கோடி 12 லட்சம் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகளுக்காக 80 லட்சம் ரூபா செலவில் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட 500 வீடுகள் கட்டிமுடியும் தறுவாயில் உள்ளதாகவும் செய்தி தெரிவிக்கிறது.

மண்டப முகாம் வந்து சேரும் அகதிகளுக்காகவே குடியிருப்புகள் அமைக்கப்படுகின்றன.

ஸ்ரீமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா வரும் மக்கள் தங்குவதற்கும் தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்த தபால் கட்டணங்கள் நாளை முதல் அமுல்

ஒரே பார்வையில் படியுங்கள்

யாழ்ப்பாணம், நவ. 30

அதிகரிக்கப்பட்ட புதிய உள்ளூர் தபால் கட்டண விகிதங்கள் டிசம்பர் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றன.

பழைய, புதிய கட்டணங்களை இங்கு ஒரே பார்வையில் தெரிந்துகொள்ளலாம்.

	பழையது		புதியது	
	ரூ.	ச.	ரூ.	ச.
கடிதங்கள்		60		75
அஞ்சல் அட்டை		35		50
பதிவுத் தபால்	4	00	5	00
இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட சஞ்சிகைகளும் புதினத்தாள்களும்		40		50
பார்சல்கள் முதல் அரை கிலோ	2	50	3	00
வி. பி. பி. பார்சல் முதல் அரை கிலோ	2	50	3	00
மேலதிக அரை கிலோ	1	25	1	50
காப்புறுதிக் கட்டணம் ஒவ்வொரு 100ரூபாவிற்கு	4	00	5	00
கடுகதிக் கட்டணம்	5	00	6	00
தாமதக் கட்டணம்	1	00	1	25
அச்சடித்த விடயங்கள் ஒட்டப்படாதது முதல் 30 கிறும்ஸ்		25		50
ஒவ்வொரு மேலதிக 60 கிறும்ஸ்		25		35
அடையாள அட்டை	10	00	15	00
தந்திக் காசுக் கட்டளை நிலையான கட்டணம்	2	50	3	25
மணியோடர் கமிஷன் ஒவ்வொரு 50 ரூபாவுக்கும் அல்லது ஒரு பகுதிக்கு	1	00	1	25
முத்திரையிடப்பட்ட கடித உறை		70		85
தபாற் கட்டளை				
50 சதம், 1 ரூபா, 1 ரூபா 50 சதம் கமிஷன்		15		25
2 ரூபா, 2ரூபா 50 சதம் 3ரூபா, 4 ரூபா		25		40
5 ரூபா, 7 ரூபா 50 சதம் 10 ரூபா		40		60
15 ரூபா, 20 ரூபா		50		75

ரூபவாஹினி

சனிக்கிழமை

(30 – 11 – 1985)

மாலை

5-00 செய்திகள்
5-05 கார்டூன் தொடர்
5-10 உங்கள் உடலைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள் —சிங்களம்
5-30 பாடசாலைகள் உடற் பயிற்சி விளையாட்டுப் போட்டிகள் 85
6-30 செய்திகள்-தமிழ்
7-00 குரங்குகளின் கிரகம்
8-00 செய்தி-சிங்களம்
8-25 ரெலிடிராமா–சிங்களம்
9-00 செய்திகள் ஆங்கிலம்
9-25 தர்ம யாத்திரை சிங்களம்
9-50 துப்பறியும் தொடர்கதை ஆங்கிலம்

விளையாட்டரங்கு

* யாழ்ப்பாணத்தில் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டம்

கழகசுற்றுப்போட்டிகள்

விறு விறுப்பான கட்டத்தில்

விளையாட்டுச் செய்தியாளர்: சண். ஜோன்சன்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். உதைபந்தாட்டச் சங்கம், விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி விறுவிறுப்பான கட்டத்தை அடைந்திருக்கிறது.

இன்று 'ஏ' பிரிவு ஆட்டத்தில் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகமும் பாடும் மீன் விளையாட்டுக் கழகமும் நேரடி மோதலில் இறங்குகின்றன.

'பி' பிரிவு ஆட்டத்தில் அல்லைப் பிட்டி அணியை எதிர்த்து புனிதவளன் அணி ஆடும். மற்றொரு போட்டியில் வைக்கிங்ஸ் அணியுடன் சென். மேரிஸ் நீல அணி மோதுகிறது.

யாழ். உதைபந்தாட்டச் சங்கம் நடாத்தும் இப்போட்டி இரு பிரிவுகளாக நடாத்தப்படுகிறது.

'ஏ' பிரிவில் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம், யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகம், பாடும் மீன் விளையாட்டுக் கழகம், சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம், பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆகிய ஐந்து கழகங்கள் பங்குபற்றுகின்றன.

'பி' பிரிவில்பத்து அணிகள் கலந்து கொள்கின்றன. இவை இரு நிரல்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நிரல் அணிகளுக்கும் இடையில் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

'ஏ' பிரிவு சுற்றுப்போட்டியில் அநேக ஆட்டங்கள் முடிவடைந்து விட்டன. சுற்றுப்போட்டி இறுதிக் கட்டத்தில் தற்போது விறுவிறுப்படைந்திருக்கிறது.

தினமும் பெருந்தொகையான ரசிகர்கள் இந்த ஆட்டங்களைக் கண்டு களித்து வருகின்றார்கள்.

இப்போட்டிகளுக்கான ஒழுங்குகளை சங்கத் தலைவர் டாக்டர் ஜே. பி. சி. பிலிப் தலைமையில் செயலர் திரு. இ. க. குமரையா, போட்டிக் குழு செயலாளர் திரு. அ. தேவராசா, போட்டிக் குழுத் தலைவர் திரு. இசற். சிங்கராயர் ஆகியோர் கவனித்து வருகின்றனர்.

இப்போட்டிகள் யாவும் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

விக்டோரியா, சென். ஜேம்ஸ் இணைச் சாம்பியன்கள்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். பாடசாலைகளுக்கிடையிலான மூன்றாம் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் சென் ஜேம்ஸ் கல்லூரியும், சுழிபுரம் விக்டோரியா கல்லூரியும் இணைச் சாம்பியன்களாகின.

இரு கல்லூரி அணிகளுக்கும் இடையில் நேற்று யாழ். இந்து மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.

யாழ். கல்வித் திணைக்களம் இச்சுற்றுப் போட்டியை நடத்தியது.

உடற்பயிற்சிக்குப் பொறுப்பான கல்வி அதிகாரி திரு. வி. தங்கராஜா தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார்.

உடற்பயிற்சி வட்டார கல்வி அதிகாரி திரு. வி. கணேசலிங்கம் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

பாகிஸ்தான் வென்றது

லாகூர், நவ. 30

மேற்கிந்திய அணிக்கு எதிரான இரண்டாவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் 6 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது. இந்த ஆட்டம் லாகூரில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மேற்கிந்திய அணி 173 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பாகிஸ்தான் அணி 38.3 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் மேற்கிந்திய அணி வெற்றிபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று பேர்த்தில் இறுதி டெஸ்ட்

பேர்த், நவ. 30

நியூஸிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று (சனிக்கிழமை) பேர்த்தில் ஆரம்பமாகிறது.

முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரண்டாவது டெஸ்டில் வெற்றி ஆஸ்திரேலியாவுக்கு. அவ்வணி இரண்டாவது ஆட்டத்தில் 4 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின் வெற்றி தோல்வியை இன்று ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்டே நிர்ணயிக்கப் போகிறது.

பறிமுதல்

யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த பஸ் ஒன்றிலிருந்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆயிரம் சாரங்கள் நாவற்குழியில் பறிமுதல் செய்யப்பட்டன.

வலைபந்தாட்ட பயிற்சி

கரம்பன், நவ. 30

யாழ். வலைபந்தாட்டச் சங்கம் நடத்திய பயிற்சி முகாமில் 80 வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள்.

வேலணை, ஊர்காவற்றுறை விளையாட்டு அதிகாரிகளின் அனுசரணையுடன் கடந்த 27ஆம் திகதி கரம்பன் சிறிய புஷ்பம் கன்னியர் மடவித்தியாலய ஆடுகளத்தில் இந்த பயிற்சி முகாம் நடைபெற்றது.

விசேட பயிற்சியாளர்களாக செல்வி எஸ். வைத்திலிங்கமும் திருமதி சிறிகங்கேஸ்வரனும் கலந்து கொண்டார்கள்.

பழைய மாணவர் உதை பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்கள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை இந்த ஆட்டம் நடைபெற்றது. இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.

மத்திய கல்லூரி பழைய மாணவர் தரப்பில் கே. கணேசனும் சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சார்பில் ஆர். மகிந்தாவும் கோல் போட்டனர்.

திரு. ஆர். தனபாலன் ஆட்டத்திற்கு மத்தியஸ்தம் வகித்தார்.

Are You An Accountant Dont You Think Its Shame Our Assistance For You To Be An Accountant.

I.C.MA. Foundation Stage A 1st Dec. 85
Foundation Stage B 8th Dec. 85
Professional Stage I 8th Dec. 85
Professional Stage II 8th Dec. 85
Professional Stage III 8th Dec. 85

I.A.B. Foundation 1st Dec. 85
Intermidiate 7th Dec. 85
Finals 7th Dec. 85

I.A.A. Part I 15th Dec. 85
Part II 15th Dec. 85
Part III 15th Dec. 85
Part IV 15th Dec. 85

A.A.T. ASSOCIATION OF ACCOUNTING TECHNICIANS
(I.C.M.A. தராதரம் பற்றுதவர்கள் ,I.C.–M.A.பயில இலகுவான London பாட நெறி.
Preliminary Exam 8-12-85
Chartered (Local)
Prelim 15-12-85
Licenciate 15-12-85
and Chartered Secretaries Classes 15-12-85

AND ALSO
N.C.E. (Exams)
Classes
AND
SPOKEN & SPECIAL ENGLISH CLASSES
To Your Convinient Time

(அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்)

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14 St. Peter's Lane, (opp. O.L.R. Church) Hospital Road, JAFFNA. T' PHONE: 24355

அச்சடிப்போரும் வெளியிடுவோரும்: த-ஷபரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி: 30 - 11 - 1985